இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும்

இறுதிப் பரீட்சை - 2006/2007

**MCC 1206** – கணக்கியலும் நிதியியலும் அறிமுகம்

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி: 28.01.2007 நேரம்: பி.ப 1.30 - பி.ப 3.30

முதலாம் வினா அடங்கலாக ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக. நிகழ்ச்சிப் படுத்தப்படாத எண்கூட்டு இயந்திரம் பாவிக்க அனுமதிக்கப்படும்.

01. மகரகமையைச் சேர்ந்த "நிமால் வணிக நிலையத்தின்" கணக்கேடுகளிலிருந்து 31.03.2006ல் முடிவடையும் நிதி வருடத்திற்கான பின்வரும் பரீட்சை மீதி எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 01.04.2005 ல் இருப்பு | 800,000 | - |
| கடன் பட்டோர் | 200,000 | - |
| பெற்ற கழிவுகள் | 6,000 | - |
| அஞ்சல் செலவு | 800 | - |
| கணக்காய்வுச் செலவுகள் | 18,000 | - |
| சட்டாலோசனைச் செலவுகள் | 7,000 | - |
| வரிகள் | 1,500 | - |
| வாகனங்கள் | 900,000 | - |
| கணணி இயந்திரம் | 75,000 | - |
| தளபாடமும் பொருத்திகளும் | 300,000 | - |
| கட்டிடம் | 600,000 | - |
| கொள்வனவுகள் | 1950,000 | - |
| உள்முகக்காவுகை | 15,000 | - |
| அறவிட முடியாத கடன் | 11,500 | - |
| கடன் வட்டி | 34,800 | - |
| காப்புறுதி | 21,600 | - |
| காகிதாதிகள் | 19,150 | - |
| மின்சாரம் | 43,170 | - |
| வெளிமுகக் காவுகை | 8,750 | - |
| உள்முகக் காவுகை | 26,000 | - |
| கையில் காசு | 60,000 | - |
| வங்கி மீதி | 150,000 | - |
| வருமதி உண்டியல் | 500,000 | - |
| <u>பெறுமானத் தேய்வுக்கான ஒதுக்கீடுகள்</u> | | |
| வாகனங்கள் | | 90,000 |
| தளபாடமும் பொருத்திகளும் | - | 30,000 |
| கட்டிடம் | - | 60,000 |
| கம்பியூட்டர் | - | 750 |
| ஐயப்பாடான கடன்களுக்கான ஒதுக்கீடு | | 4,000 |

| | | |
|---|---|---|
| செல்மதி உண்டியல்கள் | - | 120.000 |
| கடன் பட்டோர் | - | 350,000 |
| ஏனைய வருமானங்கள் | - | 80,000 |
| பெற்றுக்கொண்ட கழிவுகள் | - | 3,000 |
| விற்பனைகள் | - | 3203,770 |
| மூலதனம் | - | 1200,000 |
| வங்கிக் கடன் (15% வருட வட்டி) | - | 600,000 |
| | 5748,70 | 5748,270 |

பின்வரும் மேலதிக விபரங்களும் தரப்படுகின்றது.

(i) 31.03.2006 லிருந்த இருப்பு - ரூபா. 460,000/=

(ii) முற் பணமாகச் செலுத்திய செலவுகள்
வரிகள் - ரூபா. 600/=
காப்புறுதி - ரூபா. 2,800/=

(iii) 31.03.2006ல் ஏற்படக்கூடிய செலவுகள்
மின்சாரம் - ரூபா. 2,800/=
கணக்காய்வுச் செலவு - ரூபா 6000/=

(iv) ஐயப்பாட்டுக் கடனுக்கான ஒதுக்கீடு மொத்தக் கடன் பட்டோரில் 4%மாக இருத்தல் வேண்டும்.

(v) சுகல நிலையான சொத்துக்களும் 10% நேர் கோடுமுறையில் தேய் பெறுமானம் காணப்படல் வேண்டும்.

(vi) ரூபா. 40,000/= பெறுமதியான இருப்பின் ஒரு பகுதி 31.03.2006ம் திகதி இரவு களவாடப்பட்டது. காப்புறுதிக் கம்பனி நட்டத்தின் 60%னை நட்டஈடாக வழங்க இணங்கியுள்ளது.

(vii) சொந்தக்காரர் ரூபா. 5000/= பெறுமதியான பொருட்களை தனது பாவனைக்காக எடுத்துள்ளார். இது கணக்குப் புத்தகங்களில் பதியப்படவில்லை.

பின்வரும் இறுதி அறிக்கைகளைத் தயாரிக்கவும்.

(அ) 03.03.2006ல் முடிவடைந்த நிதிவருடத்திற்கான வியாபார, இலாப, நட்டக்கணக்கு

(ஆ) 31.03.2006க்குரிய ஐந்தொகை

(40 புள்ளிகள்)

02. (அ) பின்வரும் தரவு மகரகமையிலுள்ள பியசேன இரும்புத் தொழிற்சாலையின் டிசெம்பர் 2006 மாதத்திற்குரிய கணக்கிலிருந்து பெறப்பட்டதாகும்.

01.02.2006ல் இருப்பு

| | | |
|---|---|---|
| மூலப் பொருள் | ரூபா. | 150,000/= |
| நடைபெறும் வேலை | ரூபா. | 78,000/= |
| முடிவுப் பொருள்கள் | ரூபா. | 90,000/= |

| | | |
|---|---|---|
| மூலப் பொருள் கொள்வனவு | ரூபா. | 210,000/= |
| உள்முகக்காவுகை | ரூபா. | 14,000/= |
| கொள்வனவு திருப்பம் | ரூபா. | 21,000/= |
| நேரடிக் கூலிகள் | ரூபா. | 45,000/= |
| நேரடிச் செலவுகள் | ரூபா. | 12,000/= |
| தொழிற்சாலை வேதனங்கள் | ரூபா. | 30,000/= |
| தொழிற்சாலை வாடகை | ரூபா. | 8,000/= |
| எரி பொருள் | ரூபா. | 6,000/= |
| மின்சாரம் | ரூபா. | 5,000/= |
| இயந்திரத் தேய்மானம் | ரூபா. | 2,000/= |
| ஆயுதத் தேய்மானம் | ரூபா. | 800/= |

31.12.2005ல் இருப்பு

| | | |
|---|---|---|
| மூலப் பொருள் | ரூபா. | 18,000/= |
| நடைபெறும் வேலை | ரூபா. | 36,000/= |
| முடிவுப்பொருள்கள் | ரூபா. | 2,000/= |

மேற்கூறிய தகவல்களைக் கொண்டு 31.12.2006ல் முடியும் மாதத்திற்குரிய உற்பத்திக் கணக்கினை தயாரிக்குக

(15 புள்ளிகள்)

(ஆ) சிறிய, நடுத்தரக் கைத்தொழிற் துறைகளில் பயன்படுத்தக் கூடிய இரண்டு பிரதான "செலவுக் கணக்கீடு முறைகளை" விளக்குக.

(05 புள்ளிகள்)

03. (i) பரீட்சை மீதி ஐந்தொகை ஆகிய வற்றினிடையேயுள்ள வேற்றுமைகளை விளக்குக.

(04 புள்ளிகள்)

(ii) உமது வியாபாரத்தின் பரிமானம் அதிகமாகப் பெருகுகின்றது என்பதனை அவதானிக்கின்றீர் எனக் கருதவும். உமது காசாளர் பரிமானமடையும் தன் வேலையினை நிறைவேற்றுவது கடினமெனக் காண்கின்றார். அவரின் பணிகளை பகிர்ந்தெடுக்கும் வேளையிலும் பணம்பெறல், செலுத்துதல் ஆகியனவற்றினைத் திறனாற்றலுடன் தொடர்ந்து எவ்வாறு பேணலாம் என்பதற்கான உமது ஆலோசனைகளைக் கூறுக.

(05 புள்ளிகள்)

(iii) வங்கி மீள் பரிசீலனை அறிக்கைகளைத் தயாரிப்பதன் நோக்கம் என்ன? அவ்வாறு அறிக்கை யொன்றினைத் தயாரிப்பதன் மூலமடையும் குறிப்பிட்ட அநுகூலங்களை விளக்குக.

(04 புள்ளிகள்)

(iv) காசுப் பாதீடொன்றினைத் தயாரிப்பதன் அநுகூலங்களை அட்டவனைப் படுத்துக?

(03 புள்ளிகள்)

(v) உரிமை மூலதனம், கடன் மூலதனம் ஆகியவற்றுக்கிடையேயுள்ள வேற்றுமைகளை விளக்குக.

(04 புள்ளிகள்)

04. நிரல் சில்லறைக் காசேடு ஒன்றினை வடிவமைத்து பின்வரும் கொடுக்கல், வாங்கல்களை நீர் தயாரித்த அக்காசேட்டில் பதிவு செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 01.12.2006 - | மீள்வைப்பு பணமாகப் பெற்றுக் கொண்டது | - | ரூபா. | 5000/= |
| | வங்கிக்குச் சென்ற வாகனக் கூலி | - | ரூபா. | 80/= |
| | தரையினை மினுக்கிய தொழிலாளிக்கு | - | ரூபா. | 150/= |
| | தானம் வழங்கியது | - | ரூபா. | 100/=. |
| 02.12.2006 - | காகிதாதிகள் வாங்கியது | - | டூபா. | 250/= |
| | தேயிலை, சீனி உணவு வாங்கியது- | - | ரூபா | 240/= |
| | முத்திரைகள் வாங்கியது | - | ரூபா. | 100/= |
| 03.12.2006 - | தந்தி அனுப்பியது | - | ரூபா. | 13/= |
| | பதிவுத் தபால்கள் | - | ரூபா. | 50/= |
| | காகிதாதிகள் இணைக்கும் இயந்திரம் | - | ரூபா. | 100/= |
| | தேநீர்த் தட்டம் வாங்கியது | - | ரூபா. | 125/= |

| | | | |
|---|---|---|---|
| 04.12.2006 | வருகையாளருக்கு வெகுமதி வாங்கியது - | ரூபா. | 375/= |
| | வங்கிக்குச் சென்ற வாகனக்கூலி செலுத்தியது - | ரூபா | 100/= |
| | துப்பரவு செய்யும் இயந்திரம் வாங்கியது - | ரூபா. | 225/= |
| | ஏழையொருவருக்கு தானம் வழங்கியது - | ரூபா. | 10/= |
| 05.12.2006 | காகித உறைகள் வாங்கியது - | ரூபா. | 40/= |
| | கணக்குப் பதிவுப் புத்தகங்கள் வாங்கியது | ரூபா. | 350/= |
| | காரியாலய கதிரைகளை புதுப்பித்தது - | ரூபா. | 400/= |
| | வருகையாளருக்கு இனிப்பு உணவு வாங்கியது- | ரூபா. | 80/= |

(20 புள்ளிகள்)

05. (அ) மூலதனப் பாதீடு என்னவெனக் கருதுகின்றீர்

(04 புள்ளிகள்)

(ஆ) ஒரு தொழிலுரிமையாளர் மூலதனப் பாதீடினையிட்டு அறிந்திருத்தல் ஏன் அவசியமாகின்றது?

(04 புள்ளிகள்)

(இ) ஒரு விகிதக் கணிப்பிடுதல் மூலம் தொழிலுரிமையாளரொருவர் பெறும் அநுகூலங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

(ஈ) நிதி ஆய்வுக்காகப் பயன் படுத்தப்படும் விகிதங்கள் யாது?

(04 புள்ளிகள்)

(உ) ஒரு நிறுவனத்தின் மூலதனத் தேவைகளை நிர்ணியிப்பதற்குக் கருத்திலெடுக்கப்படும் காரணிகள் யாவை?

(04 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)